# மிதிவண்டி



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com



சைக்கிள் என்று அனைவராலும் அறியப்படும் மிதிவண்டி அனைவர் வாழ்வில் பயணித்த ஒன்று. கால்நடையாகச் சென்ற மனிதனை விரைந்து பயணிக்கச் செய்தது இந்த மிதிவண்டி தான். பெரும்பாலானோரின் முதல் வாகனமும் இது தான். “கிளிங்...கிளிங்...” என்று மணி அடித்தபடி சிறுவர்கள் மிதிவண்டியை ஓட்டி வருவதே அழகுதான்.



மிதிவண்டி இரண்டு சக்கரங்களைக் கொண்டது. மிதித்து ஓட்டுவதால் இதனை மிதிவண்டி என்கிறோம்.





சிறுவர் முதல் பெரியவர் வரை அனைத்து வயதினராலும் விரும்பப்பட்ட வாகனம் மிதிவண்டி.

தற்போதும் பள்ளி மாணவர்கள் மிதிவண்டியிலேயே பள்ளிக்குச் செல்கின்றனர்.





தற்போது விரைந்து செல்ல வேண்டும் என்ற காரணத்தினால் மக்கள் மற்ற வாகனங்களைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். அவ்வாறு பயன்படுத்துவதால் காற்று அதிகளவில் மாசுபடுகிறது.



மிதிவண்டி எரிபொருளின்றி இயங்குவதால், இயற்கையை எவ்விதத்திலும் மாசுபடுத்துவதில்லை. இயற்கைக்கு மட்டுமின்றி மனிதர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. மாற்றாக மிதிவண்டி தன்னைப் பயன்படுத்துபவர்கள் ஆரோக்கியமாக வாழவே வழிவகுக்கிறது.







இதனை மிதிக்கும்போது தசை வலுவடைகிறது; தேவையற்ற கொழுப்பைக் கரைக்கிறது; மிதிவண்டியை ஓட்டுவது சிறந்த உடற்பயிற்சி என்றே மருத்துவர்கள் கூறுகின்றனர். மிதிவண்டி செலவினைக் குறைத்து, உடல் நலத்தைப் பேணிக்காக்க உதவுகிறது.



மிதிவண்டியைப் பயன்படுத்துவோம்!

மாசில்லா உலகைப் படைப்போம்!!



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com